# தூய லூர்து அன்னை திருப்பீடம்


தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.ஃபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624



(முதல் ஆண்டு)

நாள் 16 - 04 - 2017 இதழ் 21


## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி

| | |
|---|---|
| **சனி** | மாலை 6:00மணி<br>மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி<br>மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி<br>மற்றும் மாலை 6:30மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்)<br>காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பாஸ்கா ஞாயிறு

**முதல் வாசகம் :** திப : 10:34a,37-43

**பதிலுரைப் பாடல் :**
திபா : 118:1-2.16-17.22-23

**பல்லவி :** ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்.

**இரண்டாம் வாசகம்:** கொலோ 3:1-4

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
“அல்லேலூயா அல்லேலூயா!
நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக. அல்லேலூயா.”

**நற்செய்தி வாசகம்:** யோவான் 20:1-9

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |



**பங்கு மக்கள் அனைவருக்கும் பங்குத் தந்தையரின் சார்பில் ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.**



### குருத்துவ திருநிலைப்பாட்டு நாள் வாழ்த்துக்கள்

**2017 ஏப்ரல் 14ஆம் நாளன்று தனது 13ஆம் ஆண்டு குருத்துவ திருநிலைப் பாட்டு நிறைவு நாளினை சிறப்பிக்கும் நமது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உதவிப் பங்குத்தந்தை நித்திய சகாயராஜ் அடிகளார் அவர்கள் இறை ஆசிரும் நலமும் வளமும் நிரம்பப்பெற்று, தமது திருப்பணியை தொடர்ந்து ஆற்ற வாழ்த்தி ஜெபிப்போம்.**

## நன்றி

புனித வார மற்றும் கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழாவை சிறக்க உதவிட அனைத்து நல்ல உள்ளங்களுக்கு நன்றி.

## இறை இரக்க ஆண்டவரின் திருவிழா

நாள் : 21-4-2017, வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 7.15மணிக்கு நவநாள் ஜெபம் தொடர்ந்து திருப்பலி

நாள்: 22-4-2017, சனிக்கிழமை
நேரம் : மாலை 7.30மணிக்கு நவநாள் ஜெபம் தொடர்ந்து திருப்பலி

நாள்: 23-4-2017, ஞாயிறு
நேரம் : மாலை 6.00மணிக்கு நவநாள் ஜெபம் தொடர்ந்து திருப்பலி

இந்த மூன்று நாட்களிலும் திருவிழா திருப்பலியிலும் நவநாள் செபத்திலும் கலந்து கொண்டு இறை இரக்க ஆண்டவரின் ஆசீரை நிறைவாகப்பெற்றுச்செல்ல அன்போடு அழைக்கிறோம்.

அழைப்போர்: தூய லூர்து அன்னை ஆலய இறை இரக்க செபக்குழுவினர்.

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

## திருமண முன் தயாரிப்பு கருத்தரங்கு

ஏப்ரல் 30. 4. 2017, ஞாயிறு 9.30 மணி முதல் 5.30 மணி வரை கலந்து கொண்டு சான்றிதழ் பெற விரும்புவோர் தவறாது இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| நாள் | : | ஏப்ரல் 30-04-2017, ஞாயிறு |
| நேரம் | : | காலை 9.30 முதல் மாலை 5.30 வரை. |
| இடம் | : | லூர்து அன்னை பங்கு பல்நோக்கு கூடம். |
| கட்டணம் | : | $35 மட்டும் |

முன் பதிவு செய்ய விரும்புபவர்கள் தமிழ் ஆணைய அலுவலகத்தில் அருட்சகோதரியிடம் உங்கள் பெயரை பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தொடர்புக்கு:94250812

உயர் மறை மாவட்ட தமிழ் ஆணையம்
தூய லூர்து அன்னை ஆலயம்
ஒபியர் சாலை. சிங்கப்பூர்.

## சிந்தனை

கடவுளது பேரன்பு என்றென்றும் உள்ளது என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். “என்றென்றும்” என்பதின் பொருள் என்ன? “எல்லாக்காலத்திலும்” என்று நாம் பொருள் கொடுக்கலாம். அதாவது, வறுமையோ, துன்பமோ, வாழ்வோ, தாழ்வோ எல்லா நேரத்திலும் ஆண்டவரின் அன்பு, நம்மிடத்தில் உள்ளது. குறிப்பாக, நாம் தவறு செய்தாலும், ஆண்டவர் நம்மை முழுமையாக அன்பு செய்கிறார். நாம் செய்த தவறை நினைத்து, வருந்துவாரே அன்றி, நம்மை மீட்பதற்கு முயற்சிகள் எடுப்பாரேயன்றி, அவர் நம்மை தண்டிக்க வேண்டும் என்று விரும்புகிறவர் கிடையாது. அதுதான் கடவுளின் பேரன்பு என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார்.

கடவுளின் அன்பிற்கு ஈடு இணையே இல்லை. எனவே தான், அவருக்கு நன்றி செலுத்துங்கள் என்று ஆசிரியர் கூறுகிறார். நாம் செய்த தவறுகளுக்கு ஏற்ப, கடவுள் நமக்கு தண்டனை கொடுப்பவர் என்றால், நாம் அவர் முன் நிற்பதற்குக் கூட தகுதியற்றவர்களாக இருக்கிறோம். கடவுள் நம் பாவங்களைப் பார்த்து நம்மை தீர்ப்பிட்டிருந்தால், நிச்சயம் தன்னுடைய ஒரே மகனை நமக்காக இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்க மாட்டார். இயேசுவின் உயிர்ப்புப்பெருவிழா, கடவுள் இந்த உலகத்தின் மீது வைத்திருக்கிற முழுமையான அன்பை நமக்கு எடுத்துரைப்பதாக இருக்கிறது. இந்த உலகம் கடவுளின் அன்பிற்கு தகுதியில்லாத நிலையில் இருந்தாலும், கடவுள் அந்த தகுதியைக் கொடுத்து, இந்த உலகத்தை மீட்டிருக்கிறார்.

நமது வாழ்வில், கடவுள் நம்மீது காட்டி வருகிற அன்பிற்கே, நாம் எப்போதும் நன்றியுணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும். நம் அனைவர் மீதும் அவர் காட்டி வருகிற அளவற்ற இரக்கத்திற்கே நாம் முழுமையாக அவருக்கு ஊழியம் செய்கிறவர்களாக மாற வேண்டும். ஆண்டவர் மீது உண்மையான அன்பு கொண்டிருப்போம்.

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |

**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.